முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

OS.NO.83/ 2023

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | : | 2 |
| பெயர் | : | பாலசுந்தர் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் நாள் வியாழக்கிழமை திரு.ஸ்வர்ணம் ஜே.நடராஜன்.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல்விசாரணை:**

வாதி பவளக்கொடி எனது தாயார். நான் ஜேசிபி வைத்து பராமரித்து வருகிறேன். எனது தந்தை பெயர் தனபாலன் அவர் அரசுபோக்குவரத்து கழகத்தில் ஒட்டுநராக பணிபுரிந்து வருகிறார். பிரதிவாதி ஆரோக்யசாமியை தெரியும். தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியமானது. பிரதிவாதி எங்களை அனுகி தனது இடத்தை விற்பனை செய்வதாக சொல்லி பலமுறை இதுசம்மந்தமாக இது சம்மந்தமாக பேச்சுவார்தை நடத்தி 44லட்சம் என விலை நிர்ணயம் செய்து பிரதிவாதி ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தார். ஒப்பந்த தேதியில் 40 லட்சம் பணம் கொடுக்கபப்ட்டது. பலமுறை பிரதிவாதி கிரையம் செய்ய அழத்தும் அவர் காலம் தாழ்த்தி வந்தார். எனவே எனது தாயார் வழக்கு தாக்கல்செய்தார். ஒப்பந்தம் காரைக்குடி வழக்கறிஞர் திரு.செல்லதுரை அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒப்பந்தத்தில் கையெழுத்து போடப்பட்டது. எங்கள் தரப்பில் நானும் பிரதிவாதி தரப்பில் இக்னீஸியஸ் என்பவரும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காண்பிக்க கூடிய வ.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் எனது தாயாரும் பிரதிவாதியும் கையெழுத்து போட்டுள்ளார்கள்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1) இக்னீசியஸ் என்பவர் மற்றொரு சாட்சி. அந்த சாட்சிக்கு ஒப்பந்தம் குறித்த விவரங்கள் அனைத்தும் தெரியும் என்றால் சரிதான். அவரை நாங்கள் சாட்சியாக விசாரிக்கபோவதில்லை. ஒப்பந்தத்தில் காளையார்கோவில் சொத்து ஒன்றும் கழனிவாசல் சொத்து ஒன்றும் கண்டுள்ளது. காளையார் கோவில் உள்ள சொத்து 8லட்சம் என்றும்

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.08.22 17:18:07 +0530

கழனிவாசலில் உள்ள சொத்து 36 லட்சம் என்றும் விலை பேசப்பட்டது. 16.03.2021ம் தேதியன்று 40 லட்சம் ரூபாய்வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. கொடுத்த பிறகு தான் கொண்டு வந்து கையெழுத்துவாங்கினோம். எனது வீட்டில் வைத்து பணம் கொடுக்கவில்லை. எனது அப்பா தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார். தாவா சொத்துக்கள் 2ம் 3மற்றும் 2 கோடி மொத்தம் 5கோடி போகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவுக்கும் பிரதிவாதிக்கும் வரவுசெலவு வெகுநாட்களாக உள்ளது என்றால் சரியல்ல.

2) தாவா சொத்து கிரையம் பேசுவதற்கு 2, 3 மாதங்களுக்கு முன்பு இருந்துதான் பிரதிவாதி எங்களுக்கு பழக்கம் என்றால் சரிதான். ஒப்பந்ததில் கா ல அவகாசம் 6மாதம் என குறிப்பிடப்பட்டுள்ளது. 6 மாதகாலத்திற்குள் பாக்கி கிரைய தொகையை ரொக்கமாகவோ வரைவுகாசோலையாகவோ பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஒப்பந்தகாலம் முடிவடைந்து விட்டது என்றும் எனவே ஒப்பந்தத்தை நிறைவேற்றும் கடைமை பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பா பிரதிவாதிக்கு 4, 5 லட்சம் ரூபாய் வட்டிக்கு கடன் கொடுத்திருந்தார் என்றும் அந்த கடன் தொகைக்கு ஆதரவாக தான் இந்த ஒப்பந்தம் ஏற்படடுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பணம் கொடுத்த விவரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் எனது தாயாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.08.22 17:18:13 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை